Destination For Desired Learners

Shiksha By Swathika

An IAS Academy



# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள்-2024

www.shikshabyswathikaiasacademy.com

Phone : 8608830102 | 9047051911

## பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

# CONTENTS


தமிழ்நாடு ........................................ 2
மாநில செய்திகள் ........................................ 8
தேசிய செய்திகள் ........................................ 13
சர்வதேச செய்திகள் ........................................ 21
அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ........................................ 26
சுற்றுச்சூழல் செய்திகள் ........................................ 33
விளையாட்டு செய்திகள் ........................................ 38
விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........................................ 39
பிரபலங்கள் ........................................ 41
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........................................ 41
முக்கிய தினங்கள் ........................................ 43

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024


## தமிழ்நாடு

### 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம்

1. **மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மூத்த மாவட்ட அளவிலான** அதிகாரிகள் **ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை** ஒரு தாலுகாவில் **24 மணிநேரம்** (காலை 9 மணி முதல் 9 மணி வரை) செலவிடுவார்கள்.
2. அவர்கள் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை **மதிப்பாய்வு செய்வார்கள், உள்கட்டமைப்புகளை ஆய்வு** செய்வார்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பிரதிநிதித்துவங்களைப் பெறுவார்கள்.
3. ஆரம்ப **சுகாதார நிலையங்கள், ரேஷன் கடைகள், கூட்டுறவு சங்கங்கள், பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள்** உள்ளிட்டவற்றில் அதிகாரிகள் மதியம் ஆய்வு செய்வார்கள்.




### 18வது வனவிலங்கு சரணாலயம் – தமிழ்நாடு





Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

1. **ஈரோடு மாவட்டத்தில்** உள்ள **பர்கூர் மலைப்பகுதியில்** உள்ள **80,114.80 ஹெக்டேர் காப்புக்காடுகளை** தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
2. இந்த பாதுகாக்கப்பட்ட காடுகள் **நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தை காவிரி தெற்கு வனவிலங்கு சரணாலயத்துடன்** இணைக்கிறது.

## 'சாதி மதம் அற்றவர்' சான்றிதழ்

1. **வருவாய்த்துறை அதிகாரிகளால்** 'சாதி மதம் அற்றவர்' சான்றிதழ் வழங்க முடியாது என **சென்னை உயர் நீதிமன்றம்** கூறியுள்ளது.
2. அத்தகைய சான்றிதழை வழங்குவதற்கு அவர்களுக்கு எந்த ஒரு அதிகாரமும் வழங்கப்படவில்லை.
3. மேலும், அத்தகைய சான்றிதழானது, குறிப்பாக **சொத்தின் பரம்பரை** தொடர்பான பிரச்சினைகள் மற்றும் **கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு** தொடர்பான தனிப்பட்ட சட்டங்களின் பயன்பாடு தொடர்பாக கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும்.
4. **1973 அரசு ஆணை** ஒருவர் **பள்ளிச் சான்றிதழில் சாதி அல்லது மதத்தைக் குறிப்பிடக் கூடாது** என்று மட்டுமே அனுமதிக்கிறது.

## பொன்னை ஆற்றில் தடுப்பணை

1. **தமிழ்நாடு - ஆந்திரா எல்லையில்** முதல் தடுப்பணை பொன்னை ஆற்றின் குறுக்கே, **வேலூரில்** சமீபத்தில் தொடங்கப்பட்டது.
2. **தென்பெண்ணை** என்றும் அழைக்கப்படும் பொன்னை ஆறு **பாலாற்றின் கிளை நதியாகும்.**

## தமிழக அரசின் 10 சாதனைகள்

1. **மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி** - இந்தியப் பொருளாதாரத்திற்கு 9% பங்களிப்பு.
2. **மொத்த உள்நாட்டு உற்பத்தியில்** தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
3. **மாநிலத்தின் வளர்ச்சி விகிதம்** - 8.19%, (நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24%)
4. **ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு** - பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
5. **மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில்** தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
6. **தொழில் முதலீடு** - தமிழகம் 14வது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது.


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

7. **கல்வி -** தமிழகம் இரண்டாம் இடத்திற்கு உயர்த்தப்பட்டது.
8. **புதுமையான தொழில்கள் -** முதல் இடத்தைப் பெற்றன.
9. **கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம் -** இது 5.97% ஆக குறைந்துள்ளது.
10. பெண்கள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளிம்புநிலை மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் நிலையை மேம்படுத்தியதே அரசின் 10வது சாதனையாகும்.

## முதலாவது சிறிய TIDEL பூங்கா

1. **விழுப்புரத்தில்** அமைக்கப்பட்டுள்ள தமிழகத்தின் முதலாவது TIDEL தொழில்நுட்பப் பூங்காவை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
2. மாநிலத்தின் **இரண்டாம் நிலை நகரங்களில்** தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, 2023 - 2024 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின்படி, மாநிலம் முழுவதும் **7 சிறிய TIDEL பூங்காக்களை** அரசாங்கம் அமைத்து வருகிறது.
3. **தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, வேலூர், காரைக்குடி, நாமக்கல், திருப்பூர் மற்றும் ஊட்டி** ஆகிய இடங்களில் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டு வரும் இது போன்ற **எட்டுப் பூங்காக்களுடன்**, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் சிறிய TIDEL பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாட்டில் உள்ள மகாவீர் சிலை

1. **விருதுநகர் மாவட்டம் திருச்சுளி** அருகே **மணவராயனேந்தலில்** 1,000 ஆண்டுகள் பழமையான தீர்த்தங்கர மகாவீரர் சிலை கண்டெடுக்கப்பட்டது.
2. சிற்ப நுட்பத்தின் அடிப்படையில், இந்த சிலை **கிபி 11 ஆம் நூற்றாண்டைச்** சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.



# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## கொற்றவை சிற்பம்

1. **உளுந்தூர்பேட்டை** அருகே தொல்லியல் ஆய்வாளர்கள் **எட்டாம் நூற்றாண்டைச்** சேர்ந்த கொற்றவை சிற்பத்தை கண்டுபிடித்துள்ளனர்.
2. **1,200 ஆண்டுகள் பழமையானது** என்றும், வழிபாட்டுக்கு பயன்படுத்தப்பட்டது என்றும் உறுதி செய்தனர்.



3. இந்த சிலை **எட்டு கைகளுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது**, இது **பல்லவர் காலத்தில்** எட்டாம் நூற்றாண்டில் தோன்றியதைக் குறிக்கிறது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான சேவை மற்றும் தீர்வு வழங்கீட்டு மையங்கள் தமிழ்நாடு

1. **மாநில மாற்றுத் திறனாளிகள் நலத்துறையானது** விரைவில் துணைப்பிரிவு மட்டத்திலான பகுதிகளில் **39 மாற்றுத் திறனாளிகளுக்கான சேவை மற்றும் தீர்வு வழங்கீட்டு மையங்களை (OSCS)** நிறுவவுள்ளது.
2. இது **உலக வங்கியின்** நிதியுதவியினைப் பெறும் RIGHTS திட்டத்தின் கீழ் உருவாக்கப் படுகிறது.
3. RIGHTS என்பது **உண்மையான மனித முன்னேற்ற ஆதரவுக்கான மறுவாழ்வு முன்னெடுப்பு** என்பதைக் குறிக்கிறது.

## தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் நல நடவடிக்கைகள் 2024

1. <u>நிதி உதவி</u>:
   - இஸ்லாமிய மாணவிகளுக்கு வக்ஃப் வாரியத்தின் மூலம் மெட்ரிக்-க்கு முந்தைய (ஒன்றை முதல் எட்டாம் வகுப்பு வரை) உதவித்தொகை திட்டத்தின் கீழ் மாநில அரசு நிதி உதவி வழங்கும்.


Website: www.shikshabyswathikaiasacademy.com
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Follow insta : tnpsc.shikshabyswathika
Phone : 8608830102/ 9047051911

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

2. <u>**கல்வி கடன்**</u>:
    - **"தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், கூட்டுறவு வங்கிகள்** மூலம், இஸ்லாமிய சிறுமிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை, **5 லட்சமாக உயர்த்தும்."**
3. <u>**'புதுமணி பென்' திட்டம்**</u>:
    - அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் **ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு** வரை **தமிழ் வழியில்** படிக்கும் **பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும்.**
4. <u>**சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ்கள்**</u>:
    - **இஸ்லாமிய சட்டப்படி திருமணம்** செய்து கொண்ட **இரண்டாவது மனைவி** மற்றும் அவர்களது மகன்கள் மற்றும் மகள்களுக்கு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
5. <u>**காலாவதி:**</u>
    - மத சிறுபான்மை சான்றிதழ்களில் காலாவதி தேதி குறிப்பிடப்பட மாட்டாது.
6. <u>**நிரந்தர அங்கீகாரம்**</u>:
    - **சிறுபான்மை கல்வி** நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**ரோடமைன்-பி**




1. தமிழ்நாடு அரசானது, சமீபத்தில் பஞ்சு மிட்டாய் என்றும் அழைக்கப்படுகின்ற **இனிப்பு மிட்டாய் விற்பனை மற்றும் உற்பத்தியைத் தடை** செய்துள்ளது.

2. இந்தப் பஞ்சு மிட்டாய்களில், **புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனங்கள்** இருப்பதை ஒரு ஆய்வக சோதனை உறுதிப்படுத்தியதையடுத்து இந்த நடவடிக்கையானது மாநில அரசினால் எடுக்கப்பட்டுள்ளது.
3. **நீல, இளஞ்சிவப்பு மற்றும் பச்சை** ஆகிய நிறங்களைக் கொடுக்கும் ரோடமைன்-B என்ற நிறமூட்டுக் காரணியானது பாதுகாப்பற்றது என்பதோடு இது மனிதர்கள் உட்கொள்வதற்கும் உகந்ததன்று.
4. **ரோடமைன்-B அல்லது RhB** என்பது **ஜவுளி, காகிதம், தோல் பொருட்கள் மற்றும் வண்ணப் பூச்சுகள்** ஆகிய தொழில் துறையில் **ஒரு நிறமூட்டுக் காரணியாக** சாயமிட பயன்படுத்தப்படும் ஒரு வேதிப்பொருள் ஆகும்.

## ‘தொல்குடி’ திட்டம்

1. **பழங்குடியினர் மேம்பாட்டிற்காக** புதிய திட்டம் ‘தொல்குடி’ அடுத்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
2. இத்திட்டத்தின் கீழ், **பழங்குடியினர் வசிக்கும்** பகுதிகளில் சாலை வசதிகள், குடிநீர் தெருவிளக்குகள் மற்றும் நிரந்தர வீடுகள் போன்ற **அடிப்படை வசதிகள்** வழங்கப்படும்.
3. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக **பழங்குடி சமூகங்களின் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த** அர்ப்பணிப்பு திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

## நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை

1. **தமிழக முதல்வர்** அவர்கள் **நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையைத்** திறந்து வைத்தார்.
2. இது சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள 9 லட்சம் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் வகையில் **ஒரு நாளைக்கு 150 மில்லியன் லிட்டர்** கொள்ளளவு (mld) நீரை சுத்திகரிப்பு செய்யக் கூடியது.
3. **இந்தியாவில் சென்னை நகரம் மட்டும் தான்** 750 மில்லியன் லிட்டர் அளவிற்குக் கடல் நீரைக் குடிநீராக்கும் **முதல் நகரமாகும்**.

## தேசிய முதியோர் மையம்

1. இந்தியாவின் முதல் தேசிய முதியோர் மையம் **சென்னையில் உள்ள கிண்டியில்** தொடங்கப்பட்டது.
2. **ஆயுஷ் மற்றும் சித்த** மருந்துகளும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

### தமிழ்நாடு புல்வெளி மறுசீரமைப்புத் திட்டத்திற்கான மாதிரிப் பகுதி

1. **தமிழ்நாடு மாநில வனத்துறையானது, மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன்** (FCRI) இணைந்து, கோவை மாவட்டத்தில் உள்ள **சிறுமுகை வனச்சரகத்தில் மாதிரிப் புல்வெளி** மறுசீரமைப்புப் பகுதியினை அமைப்பதற்கான பணிகளைத் துவக்கியுள்ளது.
2. FCRI குழுவானது, சிறுமுகை பகுதி **வனச்சரகத்தின் உலர்-இலையுதிர் வனப்பகுதியான பெத்தி குட்டை** என்ற காப்புக் காட்டில் ஒரு ஹெக்டேர் பரப்பிலான நிலத்தை இதற்காக அடையாளம் கண்டுள்ளது.
3. இது தமிழக அரசின் மெய்ப்புலம் என்ற திட்டத்திற்கான **தமிழ்நாடு பல்லுயிர்ப்பெருக்க வளங்காப்பு மற்றும் பருவநிலை மாற்றங்கள் நடவடிக்கைகளுக்கான ஒரு பசுமைத் திட்டத்திற்கான** (TBGPCCR) மாதிரிப் பகுதியாகச் செயல்படும்.

## மாநில செய்திகள்

### ஆந்திர பிரதேசத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு

1. **ஆந்திரப் பிரதேசம்** மாநிலத்தில் உள்ள அனைத்து சாதியினரையும் கணக்கெடுக்கும் விரிவான சாதிக் கணக்கெடுப்பை தொடங்கியது.
2. மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்காக பிரத்யேக தொலைபேசி செயலியை அரசு வடிவமைத்துள்ளது.
3. பீகாருக்கு அடுத்தபடியாக, இதுபோன்ற சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பைத் தொடங்கும் இரண்டாவது மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.

### 4வது தேசிய சிலிகா பறவை திருவிழா

1. **ஒடிசா மாநிலத்தின் மங்களஜோதி** என்னுமிடத்தில் 4வது தேசிய சிலிகா பறவை என்ற திருவிழா நடைபெற்றது.
2. **குளிர்காலத்தில் மங்களஜோதிக்கு** வருகை தரும் **200 பறவை இனங்களைச்** சேர்ந்த **10 லட்சம் பறவைகளை** இந்த திருவிழா கொண்டாடுகிறது.
3. **சிலிகா ஏரி** ஆனது பறவைகளுக்கான **மத்திய ஆசிய வலசைப் போக்கு** வழித்தடத்தில் அமைந்துள்ளது.


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

4. **ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியான** சிலிக்காவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மங்களஜோதி, **"ஆசியப் பறவைகளின் சொர்க்கம்"** என்று அழைக்கப் படுகிறது.

## இந்திய முதியோர் அறிக்கை 2023: ஜம்மு காஷ்மீரின் ஆயுட்காலம்

1. இது **சர்வதேச மக்கள்தொகை அறிவியல் கல்வி நிறுவனம்** மற்றும் **ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தால்** இணைந்து தயாரிக்கப்படுகிறது.
2. ஜம்மு & காஷ்மீர், **முதியோர்களின் வறுமைக்கு எதிராக** (வறுமையினைப் போக்கும் நடவடிக்கை) மிகவும் குறிப்பிடத்தக்க நெகிழ்திறன் கொண்ட ஒரு பிராந்தியமாக உருவெடுத்துள்ளது.
3. ஜம்மு &காஷ்மீரில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள **முதியோர்களின் எண்ணிக்கை வெறும் 4.2 %** ஆகும்.
4. **60 வயதிற்குப் பின்னதான** அதிகபட்ச ஆயுட்காலத்துடன் **ஜம்மு காஷ்மீர்** தனித்து நிற்கிறது.
5. **ஆண்கள்** - 20.3%, மற்றும் **பெண்கள்** - 23.0%, இது 2015-19க்கு இடையில் இந்த மக்கள்தொகை குறிகாட்டியில் முன்னணியில் உள்ளது.




## ஜாதுங் கிராமத்தின் மறுசீரமைப்பு

1. "இத்தகைய முதல் வகை" முன்னெடுப்பில், **உத்தரகாண்ட் மாநில அரசாங்கம்** ஆனது **உத்தரகாசி மாவட்டத்தில்** உள்ள **ஜாதுங் கிராமத்தை** மீண்டும் கட்டமைத்து அதை மறு சீரமைப்பு செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

2. இது **1962 ஆம் ஆண்டு இந்திய-சீனப் போருக்குப்** பிறகு அங்கு தங்கியிருந்த மக்களால் கைவிடப்பட்டது.
3. அன்றிலிருந்து இந்தக் கிராமம் ஆனது, **இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறையின்** (ITBP) கட்டுப்பாட்டில் உள்ளது.
4. **லடாக் போன்ற குளிர்ந்த பாலைவனப்** பகுதியான இந்த இடமானது **சரியான சாலை இணைப்பைக் கொண்டுள்ளதால்**, ஒரு சாத்தியமான சுற்றுலாத் தலமாக இது உள்ளது.

## பாட்னா பிரகடனம்

1. சமீபத்தில் **பீகார் தலைநகரில்** மூன்று நாட்கள் அளவிலான **சர்வதேச பயிலரங்கம்** நடைபெற்றது.
2. இது **வன மற்றும் வலசைப் பறவைகளை சட்டவிரோதமாக வேட்டையாடுவதைத் தடுப்பதையும்**, மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தில் (CAF) உள்ள நாடுகளில் அவற்றின் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. **மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தில்** பயணிக்கும் பறவைகளைப் பாதுகாப்பதற்காக அந்த மாநிலத்தின் செயல் திட்டத்தைப் பற்றி இந்தப் பிரகடனம் கூறுகிறது.
4. CAF பிராந்தியத்தில் பறவைகளை சட்டவிரோதமாக **வேட்டையாடுதல், கைப்பற்றிச் செல்வது மற்றும் வர்த்தகம் செய்வதைத் தடுப்பதற்கான** பல்வேறு உத்திகள் மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## கேரளாவின் சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கை


1. முதன்முறையாக, **கேரள அரசு ஆனது சுற்றுச்சூழல்** சார் நிதிநிலை அறிக்கையினை மாநில அரசின் நிதிநிலை அறிக்கையுடனான தனி ஆவணமாக அறிமுகப்படுத்தி உள்ளது.
2. இது **நிதிநிலை அறிக்கை மற்றும் நிதிக் கொள்கைகளின்** சுற்றுச்சூழல் தாக்கங்களை மதிப்பிட்டு, மாநிலத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் சுற்றுச்சூழல் சார்ந்த கருத்துக்களை ஒருங்கிணைக்கிறது.
3. முதல் **சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கையில்** தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் வேளாண்மை, கால்நடைகள், மீன்வளம், காடுகள் மற்றும் வனவிலங்குகள்,


Website: www.shikshabyswathikaiasacademy.com Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy Phone : 8608830102/ 9047051911

சுற்றுச்சூழல், நீர் வளங்கள், கூட்டுறவு, மண் ஆய்வு மற்றும் எரிசக்தி துறை ஆகியன ஆகும்.

## தடோபா காவால் வளங்காப்பகம்

1. தெலுங்கானா மாநில அரசானது, **தடோபா-அந்தாரி புலிகள் வளங்காப்பகம் மற்றும் கவால் புலிகள் சரணாலயம்** இடையே உள்ள வழித்தடப் பகுதியை வளங்காப்பகமாக அறிவித்துள்ளது.
2. தடோபா-அந்திராரி புலிகள் வளங்காப்பகம் ஆனது **மகாராஷ்டிராவில்** அமைந்து உளது.
3. வளங்காப்பு மற்றும் சமூக வளங்காப்பகங்கள் ஆனது, **1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்** கீழ் சேர்க்கப்பட்ட மேலும் இரண்டு பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் ஆகும்.
4. இந்தச் **சட்டத்தின் 36(A)** என்ற பிரிவின்படி, மாநில அரசு தனக்குச் சொந்தமான எந்தப் பகுதியையும் வளங்காப்பகமாக அறிவிக்கலாம்.




## அசாம் மாநில அரசின் பழம்

1. அசாமின் தனித்துவமான **எலுமிச்சை வகையான காஜி நெமு** (அசாம் எலுமிச்சை), அம்மாநிலப் பழமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இது தனது **நறுமணம், சுவை மற்றும் ஆரோக்கிய** நன்மைகளுக்குப் பெயர் பெற்றது.
3. **காஜி நெமு ஏற்கனவே புவிசார் குறியீட்டினைப்** பெற்றுள்ளது.
4. வேறு எந்த மாநிலத்திலோ அல்லது நாட்டிலோ விளையாத, மருத்துவ குணங்கள் மற்றும் சிறப்பு நறுமணம் கொண்ட பழங்களில் இதுவும் ஒன்று ஆகும்.

5. காஜி நெமு நோய் **எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது** என்பதோடு இது **மனித உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கிறது** மற்றும் மன அழுத்தத்தை குறைக்கிறது என்பதும் நிரூபிக்கப் பட்டுள்ளது.



## பிர் லச்சித் போர்புகான் சிலை



1. **அசாமின் ஜோர்ஹாட்டில் உள்ள லாடோய்கர்** என்னுமிடத்திற்கு அருகில் உள்ள **ஹோலோங்கபார்** என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ள பிர் லச்சித் போர்புகான் அவர்களின் **125 அடி உயரச் சிலையானது** மார்ச் மாதத்தில் திறக்கப்பட உள்ளது.
2. முகலாயப் படையெடுப்பை முறியடித்த **1671 ஆம் ஆண்டு சராய்காட் போரில்** அவர் ஆற்றியத் தலைமைத்துவத்திற்காக வேண்டி அவர் அறியப்படுகிறார்.
3. இந்தச் சிலையானது **அசாமிய மக்களின் வீரம் மற்றும் உத்வேகத்தின்** அடையாளம் ஆகும்.

## சீர்மிகு கிராமப் பஞ்சாயத்து

1. 'சீர்மிகு கிராமப் பஞ்சாயத்து: கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை எண்ணிமமயமாக்கும் புரட்சி' என்ற **சோதனை திட்டம்** ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
2. **பீகாரில் உள்ள பெகுசராய் மாவட்டம்** முழுவதிலும் இருக்கும் அனைத்து கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளிலும் PM-WANI (பிரதமரின் அருகலை சேவை இணைப்பு

அணுகல் வலையமைப்பு இடைமுகம்) சேவையை மிகவும் விரிவுபடுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

3. PM-WANI திட்டத்தின் கீழ் அனைத்து கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளிலும் அருகலை (WiFi) இணைப்புச் சேவைகளை கொண்ட **பீகாரின் முதல் மாவட்டமாக பெகுசராய்** மாறியுள்ளது.

# தேசிய செய்திகள்

### உச்ச நீதிமன்றத்தின் 75வது ஆண்டு விழா

1. இந்திய உச்ச நீதிமன்றமானது **டெல்லியில் வைர விழா** கொண்டாட்டத்தை அனுசரித்தது.
2. இந்த நிகழ்வின் போது, **எண்ணிம உச்ச நீதிமன்ற அறிக்கைகள் (டிஜி எஸ்சிஆர்), எண்ணிம நீதிமன்றங்கள் 2.0** மற்றும் **உச்ச நீதிமன்றத்திற்கான** புதிய **இருமொழி இணையதளம்** ஆகியவை தொடங்கப்பட்டன.
3. **1950 ஜனவரி 26** அன்று அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் உச்ச நீதிமன்றம் நடைமுறைக்கு வந்தது.
4. இது ஆரம்பத்தில் **1937 முதல் 1950 வரை 12 ஆண்டுகள் இந்திய கூட்டாசி நீதிமன்றமாக** பழைய பாராளுமன்ற கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது.
5. இது 1958 இல் புது டெல்லியில் உள்ள தற்போதைய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.



### இந்தியாவின் முதல் சுகாதாரமான உணவு தெரு 'பிரசாதம்'

1. **மத்தியப் பிரதேச மாநிலம் உஜ்ஜைனியில்** உள்ள நீலகண்ட வான், மஹாகல் லோக் என்ற இடத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில், **நாட்டின் முதல் ஆரோக்கியமான**

## பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

**மற்றும் சுகாதாரமான உணவுத்** தெருவான 'பிரசாதத்தை' மத்திய சுகாதார அமைச்சர் சமீபத்தில் திறந்து வைத்தார்.

2. 939 சதுர மீட்டர் பரப்பளவை கொண்டது, "பிரசாதம்" முழுமையான **வளர்ச்சியின் அடையாளமாக** உள்ளது.
3. "பிரசாதம்" ஒரு **சமையல் மகிழ்ச்சியை** வழங்குவதைத் தாண்டியது. இது ஒரு பிரத்யேக குழந்தைகள் விளையாடும் பகுதி, குடிநீர் வசதி, CCTV கண்காணிப்பு, போதுமான வாகன நிறுத்துமிடம், பொது வசதிகள் மற்றும் விசாலமான இருக்கைகள் உள்ளிட்ட பல வசதிகளை வழங்குகிறது.

### தேசிய இளைஞர் விழா

1. **மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில்** 27வது தேசிய இளைஞர் விழாவை பிரதமர் தொடங்கி வைத்தார்.
2. தேசத்தின் இளைஞர்களுக்கு உரையாற்றினார்.
3. **சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளையும் சிந்தனைகளையும்** போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய இளைஞர் தினம் கொண்டாடப்படுகிறது.
4. இந்த ஆண்டு தேசிய இளைஞர் விழாவின் கருப்பொருள் - **MYBharat ViksitBharat@2047- இளைஞர்களால், இளைஞர்களுக்காக.**
5. கொண்டாட்டத்தின் போது, **பல்வேறு மாநிலங்கள் தங்களின் பல்வேறு கலாச்சார பாரம்பரியத்தின்** நிகழ்ச்சிகளை காட்சிப்படுத்துவார்கள்.

### சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து தாழ்வாரம் (INSTC)

1. INSTC என்பது **7,200-கிமீ நீளமுள்ள கப்பல்**, இரயில் மற்றும் சாலை வழித்தடங்களின் பல-முறை இணைப்பு ஆகும்.
2. **இந்தியா, ஈரான், அஜர்பைஜான் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு** ஆகிய நாடுகளில் இருந்து **கப்பல், ரயில் மற்றும் சாலை வழியாக** சரக்குகளை நகர்த்துவதை இந்த பாதை முதன்மையாக உள்ளடக்கியது.
3. INSTC திட்டத்தின் முதன்மை நோக்கம், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பாரம்பரிய பாதையில் நேரம் மற்றும் பணத்தின் அடிப்படையில் செலவுகளைக் குறைப்பதாகும்.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

4. INSTC ஆனது சரக்குகளின் சீரான போக்குவரத்தை எளிதாக்குகிறது, **பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது** மற்றும் **உறுப்பு நாடுகளுக்கு** இடையேயான தொடர்பை மேம்படுத்துகிறது.

## நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி ஆணையம்

1. நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையிலான ஆணையம், **அறிக்கையை இறுதி செய்யும் பணியில் ஈடுபட்டு**, விரைவில் சமர்ப்பிக்க உள்ளது.
2. இந்த ஆணைக் குழுவானது **வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணங்கள்** தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்யவும், சர்வதேச பொதுச் சட்டம் மற்றும் தனியார் சட்டங்கள் தொடர்பான சட்டமுறைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் பணிக்கப் பட்டுள்ளது.
3. NRI திருமணங்களில் குழந்தைகள் மற்றும் மனைவிகளை கைவிடுதல், கடவுச்சீட்டை பறிமுதல் செய்தல், நாடு கடத்துதல், குழந்தைகளை பாதுகாத்தல் மற்றும் மனைவிகளை தவறாக நடத்துதல் போன்ற கடுமையான பிரச்சினைகளுக்கு தீர்வு காண கடுமையான நடவடிக்கைகளை ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
4. **2019 ஆம் ஆண்டுக்கான** வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணங்களை **பதிவு செய்வதற்கான மசோதா மற்றும் வெளிநாட்டு திருமணச் சட்டம் ஆகியவற்றை** ஆணையம் ஆய்வு செய்தது.

## கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி

1. இடைக்கால நிதிநிலை அறிக்கையானது, **9 முதல் 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு** கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி வழங்குதலை ஊக்குவிக்கும் அரசின் முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.
2. இது **HPV (மனித சடைப்புத்துத் தீநுண்மம்) வைரஸ்** தடுப்பூசி வழங்கும் திட்டத்தினை உள்ளடக்கியது.
3. இந்திய மக்கள் தொகையில் **15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 511.4 மில்லியன் பெண்கள்** இந்நோயினால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்.
4. **கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்**, இந்தியாவில் பெண்களிடையே அடிக்கடி ஏற்படும் **புற்றுநோய்களில் இரண்டாவது இடத்தில்** உள்ளது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## GHAR இணைய தளம்

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது **"டிராக் சைல்ட் இணைய தளத்தினை"** (குழந்தைகளை கண்காணித்தல்) உருவாக்கியுள்ளது.
2. இது **மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், வடகிழக்குப் பகுதி** மாநிலங்கள் **மற்றும் ஜார்க்கண்ட்** உள்ளிட்ட அனைத்து மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் காணாமல் போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்காணிக்க உதவுகிறது.
3. மேலும், **GHAR GO Home and Re-Unite** (குழந்தைகளை மீட்டெடுத்து அவர்களது குடும்பங்களுடன் அவர்களைத் திருப்பி இணைப்பதற்கான இணைய தளம்) என்ற இணைய தளம் ஒன்றும் **தேசியக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தினால்** உருவாக்கப்பட்டு தொடங்கப் பட்டுள்ளது.

## கில்காரி திட்டம்

1. கில்காரி திட்டம், **குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில்** உள்ளூர் பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்காகச் சமீபத்தில் தொடங்கப்பட்ட **கைபேசி சுகாதார நலச் சேவை (m-health)** முன்னெடுப்பு ஆகும்.
2. **'கில்காரி' ('குழந்தையின் ஓசை' என்று பொருள்)** என்பது ஒரு மையப்படுத்தப்பட்ட இரு வழித் தொடர்பிலான குரல்வழி செய்திகளை (IVR) வழங்கும் வகையிலான கைபேசி சுகாதார நலச் சேவையாகும்.





## பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (PM- MKSSY)

1. மத்திய அமைச்சரவையானது "பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (PM- MKSSY)" திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
2. இது மத்திய அரசின் **பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா திட்டத்தின்** கீழான **துணைத் திட்டமாகும்.**

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. இது **மீன்வளத் துறையை** முறைப்படுத்துவதையும், **குறு மற்றும் சிறு மீன்வளத் தொழில் நிறுவனங்களுக்கு** ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
4. இந்தியாவின் **மொத்த மீன் உற்பத்தியானது 2022-23** ஆம் ஆண்டில் **174 லட்சம் டன்னாக இருந்தது.**
5. உலகின் மொத்த மீன் உற்பத்தியில் **8% பங்குடன் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மீன் உற்பத்தியாளராக** உள்ளது.




### பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனா

1. பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனாவைத் தொடங்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.



2. இந்த திட்டம் **75,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன்** தொடங்கப்பட உள்ளது.
3. ஒவ்வொரு மாதமும் **300 அலகு வரை இலவச மின்சாரம் வழங்குவதன்** மூலம் 1 கோடி வீடுகளுக்கு ஒளியூட்டுவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

### சேமிப்பு திட்டங்களின் பெயர் மாற்றம்


1. மத்திய அரசு ஆனது, **சுகன்யா சம்ரித்தி யோஜனாவை சுகன்யா சம்ரித்தி கணக்குத் திட்டம் 2024** என்றும், **தபால் அலுவலக கால வைப்புநிதித் திட்டத்தை திருத்தப்பட்ட** வட்டி விகிதங்களுடன் **தேசிய சேமிப்பு கால வைப்புநிதித் திட்டம் என்றும்** மறுபெயர் இட்டுள்ளது.
2. இந்தத் திட்டம் **சுகன்யா சம்ரித்தி கணக்கு (திருத்தம்) திட்டம், 2024** என்று அழைக்கப்படும் என்பதோடு, இது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படும்.
3. 2024 ஆம் ஆண்டு **ஜனவரி 01** ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு கணக்கில் வைக்கப் படும் வைப்பு நிதிகளுக்கு **8.2% வட்டி** கிடைக்கப் பெறும்.




### உலகளாவிய டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கையில் புதிய சாதனை

1. "இந்திய அரசின் டிஜிட்டல் பொருளாதார நிலை குறித்த அறிக்கை, 2024" என்ற அறிக்கையானது, **டெல்லியில் உள்ள புகழ்பெற்ற ஆலோசனை வழங்கீட்டுக் குழுவான இந்திய சர்வதேச பொருளாதார உறவுகள் சபையினால்** (ICRIER) வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகளின்படி, **உலகின் மூன்றாவது பெரிய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நாடாக இந்தியா** தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது.
3. இது **அமெரிக்கா மற்றும் சீனா** ஆகிய தொழில்நுட்ப திறன் மிகு நாடுகளுக்கு அடுத்த படியாக உள்ளது.



Top 5 countries in terms of digitalisation of economy

| Country | CHIPS score |
|---|---|
| US | 65.1 |
| China | 62.3 |
| India | 39.1 |
| UK | 28.8 |
| Germany | 23.8 |

Digitalisation in large states (Top 5)

| State | CHIPS score |
|---|---|
| Karnataka | 58.7 |
| Maharashtra | 52.6 |
| Telangana | 50.8 |
| Gujarat | 49.7 |
| Haryana | 48.6 |

## இந்தியாவின் மிகவும் வரவேற்புமிக்க பகுதி 2024

1. பிரபல இயங்கலை பயண ஏற்பாட்டு முகமையான **Booking.com நிறுவனம்**, அதன் **12வது வருடாந்திர பயணியர் மறுமதிப்பாய்வு விருதுகள்** (2024) என்ற பட்டியலை வெளியிட்டது.
2. இது இந்தியாவில் உள்ள மிகவும் வரவேற்புமிக்க பகுதிகள் மற்றும் நகரங்களை முன்னிலைப்படுத்துகிறது.
3. **இமாச்சலப் பிரதேசம் 'இந்தியாவின் அதிக வரவேற்புமிக்க பகுதி'** என்ற பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.




4. அதைத் தொடர்ந்து **கோவா, கேரளா, ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட்** ஆகியவை இடம் பெற்றுள்ளன.
5. **'இந்தியாவில் மிகவும் வரவேற்புமிக்க பத்து நகரங்கள்'** பட்டியலில் மாராரிக்குளம் (கேரளா) **முதலிடத்தில்** உள்ளது.
6. அதைத் தொடர்ந்து **ஜெய்சால்மர் (ராஜஸ்தான்), பிர் (மகாராஷ்டிரா) மற்றும் லே (ஜம்மு & காஷ்மீர்)** ஆகியவை இடம் பெற்றுள்ளன.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## உலகின் மிக உயரமான இரயில் பாலம்

1. உலகின் மிக உயரமான ஒற்றை வளைவு இரயில் **பாலமான செனாப் பாலம்** சமீபத்தில் திறக்கப்பட்டது.
2. **ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில்** உள்ள **பக்கல் மற்றும் கௌரி** ஆகிய பகுதிகளுக்கு இடையே இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது.
3. இது **கத்ராவிலிருந்து பனிஹாலுக்கு இடையிலான** ஒரு முக்கியத்துவம் வாய்ந்தப் போக்குவரத்து இணைப்பாக அமைகிறது.
4. இது ஆற்றங்கரையில் இருந்து **1,178 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதால்**, இது பாரீஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரத்தை விட **35 மீட்டர் உயரம்** கொண்டதாக உள்ளது.




## இணையவெளிக் குற்றங்கள் குறித்த அறிக்கை

1. 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டு அச்சுறுத்தல்களை மையமாகக் கொண்ட அறிக்கையில் **இந்தியா 80வது இடத்தில்** உள்ளது.
2. கூடுதலாக, இந்தியாவில் சுமார் **34% பயனர்கள் உள்நாட்டு** அச்சுறுத்தல்களால் (**சுமார் 74,385,324 உள்நாட்டு அச்சுறுத்தல் சம்பவங்கள்**) பாதிக்கப் பட்டுள்ளனர்.
3. இந்தியாவின் இணையப் பாதுகாப்பு சந்தையானது 2023 ஆம் ஆண்டில் **6.06 பில்லியன் அமெரிக்க டாலர்களை** எட்டியது.

## இராஷ்ட்ரிய உத்யமிதா விகாஸ் பரியோஜனா

1. இது பிரதான் மந்திரி SVANidhi யோஜனா திட்டத்தின் பயனாளிகளுக்காக என்று மிகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. இந்த தனித்துவமான **தேசிய தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்** ஆனது, நாடு முழுவதும் முதலாளிகளை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் நிலையான உறுதிப் பாட்டை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. இது **தனிநபர்களுக்கு விரிவான தொழில்முனைவோர் பயிற்சியை** வழங்கி, வேலை வாய்ப்பு தேடும் குழுவிற்குப் பதிலாக வேலை வாய்ப்புகளை வழங்கும் முதலாளிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
4. இந்த சோதனைத் திட்டத்தின் கீழ், **நாட்டின் 10 பெரு நகரங்களின் தெருவோர வியாபாரிகளுக்கு** அவர்களின் தொழில்களை விரிவுபடுத்துவதற்கான பயிற்சியுடன் சேர்த்து உதவித் தொகையும் வழங்கப்படும்.

## சர்வதேச செய்திகள்

### கென்யாவில் கோல்டான் இருப்புகள்

1. **கென்யா**, தனது நாட்டில் **கோல்டான் இருப்புகளைக்** கண்டறிந்துள்ளதாக உறுதிப் படுத்தியுள்ளது.
2. **கொலம்பைட்- டான்டலைட் என்பதன் பெயர் சுருக்கமாக** கூறப்படும் கோல்டான், பல்வேறு தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற **ஒரு மதிப்புமிக்க கனிமம்** ஆகும்.
3. கோல்டானில் இருந்து பெறப்பட்ட **டான்டலம், மின்தேக்கிகள்** தயாரிப்பில் வெகுவாக பயன்படுத்தப்படுகிறது.
4. காங்கோ ஜனநாயகக் குடியரசு நாடானது, உலகின் கோல்டான் இருப்புக்களில் **சுமார் 70 சதவீதத்திற்கும்** அதிகமான இருப்பினைக் கொண்டுள்ளது.




### இந்தியர்களுக்கு ஈரான் அரசின் இலவச நுழைவு இசைவுச் சீட்டு

1. தனது நாட்டிற்கு **வருகை தரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கு** நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத **15 நாட்கள் வரையிலான பயண அனுமதிக் கொள்கையை** ஈரான் அரசு அறிவித்துள்ளது.

2. இந்தியக் குடிமக்கள் **ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழக்கமான** அரசு அங்கீகாரம் கொண்ட கடவுச் சீட்டுடன் அதிகபட்சமாக **15 நாட்கள் (மேலும் நீட்டிக்கப்பட இயலாத)** தங்கியிருக்கும் வகையில் ஈரான் நாட்டிற்குப் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.
3. முன்னதாக, **வியட்நாம், தாய்லாந்து, இலங்கை** ஆகிய நாடுகளும் **இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு** விதிகளை தளர்த்தியுள்ளன.
4. **இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா** உள்ளிட்ட **ஏழு நாடுகளைச் சேர்ந்த** சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயணத்தினை மேற்கொள்ள **இலங்கை** அனுமதித்துள்ளது.




## BAPS இந்து கோவில்

1. ஐக்கிய அரபு அமீரகத்தின் **முதல் இந்து கற்கோயிலான** BAPS இந்து மந்திர் சமீபத்தில் திறக்கப் பட்டது.
2. அபுதாபியின் **முதல் இந்து கோவில் நகரா கட்டிடக்கலை** பாணியில் உருவாக்கப்பட்டு உள்ளது.



3. BAPS இந்து மந்திர் **வெப்பநிலை மற்றும் நில அதிர்வு நடவடிக்கைகளைக் கண்காணிக்கும்** வகையில் **300க்கும் மேற்பட்ட உயர் தொழில்நுட்ப உணர்வி**களுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.
4. இந்தக் கோவிலுக்கான நிலம் **ஐக்கிய அரபு அமீரக அரசால் நன்கொடையாக** வழங்கப் பட்டது.

## இணைப்பு துண்டிக்கும் உரிமை - ஆஸ்திரேலியா

1. ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆனது, "இணைப்பு துண்டிக்கும் உரிமை" என்ற சட்டத்தை இயற்ற முயல்கிறது.
2. பணி நேரத்தைக் கடந்தும் **தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல்கள்** மூலம் முதலாளிகள் பணியாளர்களை தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படும் நேரத்தை ஒழுங்குமுறைப் படுத்துவதை இது பெரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. **பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம்** ஆகிய நாடுகளில் இதே போன்ற சட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன.





4. வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையிலான எல்லைகளை நவீன தொழில் நுட்பம் குறைக்கிறது என்ற கருத்திலிருந்து இந்த 'இணைப்பு துண்டிக்கும் உரிமை' என்ற கருத்து உருவாகிறது.
5. இந்தியாவில், **2018 ஆம் ஆண்டு இணைப்பைத்** துண்டிப்பதற்கான உரிமை மசோதா ஆனது, பாரமதி பாராளுமன்ற **உறுப்பினர் சுப்ரியா சுலே** என்பவரால் தயாரிக்கப் பட்டது.
6. இது **வேலை சாராத தகவல்தொடர்புகளுக்கான** பல்வேறு விதிமுறைகள் குறித்த ஒப்பந்தத்தினை மேற்கொள்ள ஊழியர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

## வெய்மர் முக்கோணம்

1. **போலந்து, பிரான்சு மற்றும் ஜெர்மனி அரசாங்கங்கள், உக்ரைன் நாட்டினை ஆதரிக்கும்** அதிக திறன் கொண்ட இடர்காப்பு மற்றும் பாதுகாப்புச் சக்தியாக ஐரோப்பாவினை மாற்ற உறுதி மேற்கொண்டுள்ளன.

2. வெய்மர் முக்கோணம் என்று அழைக்கப்படும் **ஒரு கூட்டமைப்பினை மீண்டும் உடனே** உயிர்ப்பிப்பது குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.
3. இது **பிரான்சு, ஜெர்மனி மற்றும் போலந்து** இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட நீண்ட காலமாக செயலற்று இருந்த ஒரு பிராந்திய குழுவாகும்.
4. **போலந்து நாடானது**, பல தசாப்தகால கம்யூனிச கட்டமைப்பிலிருந்து வெளிப்பட்டு மூன்று நாடுகளுக்கிடையேயான அரசியல் ஒத்துழைப்பிற்கான **ஒரு தளமாக விளங்கியதால் 1991 ஆம் ஆண்டில்** வெய்மர் முக்கோணம் உருவாக்கப்பட்டது.




### உலகின் நான்காவது பெரிய பொருளாதாரம்

1. ஜப்பான் நாடானது **அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி** ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக உலகின் நான்காவது பெரிய பொருளாதாரம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளது.
2. ஜப்பான் நாட்டின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கடந்த ஆண்டு மொத்தம் **4.2 டிரில்லியன் டாலர் அல்லது சுமார் 591 டிரில்லியன் யென்** ஆக இருந்தது.
3. ஜப்பானிய மக்களின் வயது முதிர்வு மற்றும் குறைவான குழந்தைகள் பிறப்பு காரணமாக ஜப்பான் நாட்டின் மக்கள் தொகை குறைந்து வருவதால் ஜப்பான் நாட்டின் பொருளாதாரம் ஆனது படிப்படியாக அதன் போட்டித்திறன் மற்றும் உற்பத்தித் திறனை இழந்துள்ளது.
4. **2010 ஆம் ஆண்டில்**, **சீனாவின் பொருளாதாரம்** வளர்ச்சியடைந்ததால் ஜப்பான் **இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு** தள்ளப்பட்டது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## ஆஸ்பைட்ஸ் பாதுகாப்புத் திட்டம்

1. **ஐரோப்பிய ஒன்றியம் ஆனது ஏமன் நாட்டின் ஹௌதி கிளர்ச்சியாளர்களிடமிருந்து செங்கடல் வழியாகப்** பயணிக்கும் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக ஒரு கடற்படைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
2. பண்டைய கிரேக்க மொழியில் **"கவசம்"** என்று **பொருள்படும் ஆஸ்பைட்ஸ்** என்று அழைக்கப்படும் இந்தத் திட்டத்தில் பங்கேற்க பல உலக நாடுகள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளன.
3. ஹௌதி குழுக்கள் முதலில் தாக்கினால் மட்டுமே அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதோடு, முன்கூட்டியே **துப்பாக்கி சூடு நடத்தும் அதிகாரம்** எதுவும் கிடையாது.
4. **நவம்பர் மாதத்தில், ஹௌதி குழுக்கள்** உலக வர்த்தகத்தில் **12% வர்த்தகப் பொருட்கள்** கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் பரபரப்பான செங்கடலில் பயணிக்கும் **வணிக மற்றும் இராணுவக் கப்பல்களைத்** தாக்கி வருகின்றனர்.

## பாகிஸ்தானின் புதிய பிரதமர்

1. அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு **ஷேபாஸ் ஷெரீப் பிரதமராகவும், ஆசிப் அலி சர்தாரி அதிபராகவும்** மீண்டும் பதவியேற்க உள்ளனர்.
2. இவர் **2023 ஆம் ஆண்டு** ஆகஸ்ட் மாதத்தில் புதிய தேர்தலுக்காக தேசிய சட்டமன்றம் கலைக்கப் பட்டது வரையில் பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார்.

## பணியிட வன்முறைகள் மற்றும் பணியிட துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ILO உடன்படிக்கை




1. பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ILO உடன்படிக்கையினை அங்கீகரித்த **முதல் ஆசிய நாடாக பிலிப்பைன்ஸ்** மாறியுள்ளது.

2. உடன்படிக்கை எண் **190க்கு ஒப்புதல் வழங்கப்பட்ட நிகழ்வானது**, பணியிடச் சூழலில் உள்ள வன்முறை மற்றும் துன்புறுத்தலைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் ஒரு முக்கியமான படிநிலையைக் குறிக்கிறது.
3. இதன் மூலம், பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராக செயல்படும் **37 நாடுகளுடன்** பிலிப்பைன்ஸ் நாடும் இணைந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவி


1. **CERN** எனப்படும் **ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பானது** மூன்று மடங்கு பெரிய (மற்றும் வேகமான) எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவியை (FCC) உருவாக்க திட்டமிட்டுள்ளது.
2. FCC என்பது **91-கிலோமீட்டர் வளையத்திற்குள்** அமைந்த ஒரு துகள் முடுக்கி ஆகும் என்பதோடு இது ஒரு **பெரிய ஹாட்ரான் மோதுவியை** விட **மூன்று மடங்கு சுற்றளவைக் கொடுக்கும்.**
3. FCC ஆனது **"2045 ஆம் ஆண்டின்** முதல் பாதியில் செயல்படத் தொடங்கும்.
4. **100 டெரா எலக்ட்ரான் வோல்ட்களின்** மோதல் ஆற்றல்களை அடையும் நோக்கத்துடன், துகள் மோதல்களின் ஆற்றல் மற்றும் தீவிர வரம்புகளை அதிகரிப்பதே FCC என்றக் கட்டமைப்பின் குறிக்கோள் ஆகும்.




## GRAPES-3 பரிசோதனை

1. GRAPES-3 பரிசோதனையானது **காஸ்மிக்-கதிரின் புரோட்டான் அலைக்கற்றையில்** சுமார் **166 டெரா-எலக்ட்ரான்-வோல்ட் (Tel)** ஆற்றல் மட்டத்தில் ஒரு புதிய பண்புக் காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

2. இந்தக் கண்டுப்பிடிப்பானது, **காஸ்மிக் கதிரின் தோற்றம், அவற்றின் முடுக்க செயல் முறைகள் மற்றும் பால்வெளி அண்டத்திற்குள்** அவை எவ்வாறு நகர்கின்றன என்பது பற்றிய நமது புரிதலில் சாத்தியமிகு மாற்றத்தை அறிமுகப்படுத்துகிறது.
3. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட காஸ்மிக் கதிர்கள், பேரண்டத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துகள்களைப் பிரதிபலிக்கின்றன.




## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சீரொளிக் கற்றை ஆயுதம் DURGA-2

1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது DURGA-2 எனப்படுகின்ற உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதன் **சீரொளிக் கற்றை ஆயுதத்தின் அசல் முன் மாதிரியைப் பரிசோதிக்க** தயாராகி வருகிறது.



2. DURGA என்பது **திசை சார்ந்தக் கட்டுப்பாடுகள் அற்ற சீரொளிக் கற்றை சார் ஆயுத அமைப்பு** என்பதைக் குறிக்கிறது.
3. தற்போதைய **தலைமுறை தொழில்நுட்பத்திலான விமான எதிர்ப்பு அல்லது ஏவுகணை எதிர்ப்பு ஆயுத அமைப்புகள்** பிழையுராத் தன்மை கொண்டதாக கருதப் படவில்லை.

4. ஆனால் சீரொளிக் கற்றை சார் ஆயுதம் ஆனது **100% அழிப்பு வாய்ப்பினைக்** கொண்டிருப்பதாக கருதப் படுகிறது.

### உலகின் முதலாவது துவரம்பருப்பு உற்பத்தி விரைவாக நெறிமுறை

1. பகுதியளவு வறட்சியான **வெப்ப மண்டலத்திற்கான சர்வதேசப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம்** (ICRISAT) ஆனது உலகின் முதல் துவரம்பருப்பு உற்பத்தியை விரைவாக்க நெறிமுறையை அறிவித்துள்ளது.
2. இந்த **புதிய துவரம்பருப்பு உற்பத்தித் திட்டம் ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் வறண்ட நிலங்களில்** உணவுப் பாதுகாப்பைக் கொண்டு வருவதில் முக்கியமானதாக இருக்கும்.
3. இதன் மூலம் சுமார் **ஏழு ஆண்டுகள் ஆகும் இந்தப்** பயிரின் வளர்ப்பு காலச் சுழற்சியை **இரண்டு முதல் நான்கு ஆண்டுகளாக** குறைக்கலாம்.
4. அறிவியலாளர்கள் இந்தத் **தாவரத்தின் வளர்ச்சிக் காலத்தினை மிக வெற்றிகரமாக கட்டுப்படுத்தி, முன்கூட்டியே பூக்களைப் பூக்கச்** செய்தனர்.
5. மேலும் இதில் தியாமின், ரிபோஃப்ளேவின், நியாசின், வைட்டமின் பி-6, ஃபோலேட், வைட்டமின் ஏ, கால்சியம், துத்தநாகம், இரும்பு, மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவை அதிகமாக உள்ளது.




### உறைந்த புகை கண்டுபிடிப்பு

1. ஆராய்ச்சியாளர்கள் **'உறைந்த புகை' (புரைமக் கூழ்மம்)** எனப்படும் **அதிநுண்ணிய (அதிக ஊடுருவல் தன்மை கொண்ட) பொருட்களால்** செய்யப்பட்ட உணர்விகளை உருவாக்கியுள்ளனர்.

2. **புரைமக் கூழ்மங்களில்** உள்ள துளைகளின் வடிவத்தை துல்லியமாக வடிவமைப்பதன் மூலம், **அறை வெப்பநிலையில் ஃபார்மால்டிஹைட்டின் படிமத்தினை உணர்விகளால்** கண்டறிய முடிந்தது.
3. **ஃபார்மால்டிஹைட் என்பது** ஒரு பொதுவான **உட்புற காற்று மாசுபடுத்தியாகும்**.
4. இது **செயற்கை நுண்ணறிவு நுட்பங்களைப் பயன்படுத்தி**, ஒரு பில்லியனுக்கு எட்டு பாகங்கள் என்ற செறிவுகள் என்ற அளவில் நிகழ் நேரத்தில் ஃபார்மால்டிஹைடைக் கண்டறியும்.
5. இது **பெரும்பாலான உட்புறக் காற்றின்** தர உணர்விகளின் உணர்திறனை விட மிகவும் அதிகமான திறனைக் கொண்டுள்ளது.



## அதி உயர் ஆற்றல் கொண்ட துகள் "அமேதராசு"

1. அதி-உயர் ஆற்றல் கொண்ட மிகவும் பெரு **சக்திவாய்ந்த துகளை அறிவியலாளர்கள்** கண்டறிந்துள்ளனர்.
2. அது **பால்வெளி அண்டத்திற்கு** அப்பால் இருந்து **பூமிக்கு பயணித்துள்ளதாக** அவர்கள் கருதுகின்றனர்.




3. இந்த மிக அசாதாரணமான ஒரு துகளுக்கு **"சூரியக் கடவுள்" (ஜப்பானிய மொழியில் அமேதராசு) துகள்** என்று பெயரிடப்பட்டுள்ளது.
4. இந்த துகள் மிகவும் சக்திவாய்ந்த துகள் முடுக்கிகளில் உருவாக்கக்கூடிய **ஆற்றல் மட்டத்தை** விட **ஒரு மில்லியன் மடங்கு** அதிகமாக கொண்டுள்ளது.

5. இது **1991 ஆம் ஆண்டில்** கண்டறியப்பட்ட **"Oh-My-God" என்ற துகள்**, இதுவரையில் **கண்டறியப் படாத ஆற்றல் மிக்க காஸ்மிக் கதிரின் எதிர் மாற்றுப்** பொருளாக உள்ளது.

### குறுங்கோள்களில் நீர்

1. **ஐரிஸ் மற்றும் மசாலியா** ஆகிய **குறுங்கோள்களின் மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகள்** இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக கண்டறிந்துள்ளனர்.
2. **அகச்சிவப்பு வானியலுக்கான படை அடுக்கு மண்டல ஆய்வகத்தினால்** (SOFIA) சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த கண்டுபிடிப்பு மேற் கொள்ளப் பட்டுள்ளது.
3. **ஐரிஸ் மற்றும் மசாலியா** ஆகிய **இரண்டிலும் சிலிக்கேட்டுகள்** நிறைந்துள்ளன.
4. ஐரிஸ் (199 கி.மீ. விட்டம் கொண்டது) மற்றும் மசாலியா (135 கி.மீ. விட்டம் கொண்டது) ஆகியவை ஒரே சுற்றுப்பாதைகளைக் கொண்டு, **சராசரியாக 2.39 வானியல் அலகுகள் (AU) தொலைவில்** பயணிக்கின்றன.



### இந்தியாவின் முதல் அதி உயர் திசைவேக விரிவாக்க குழலமைப்பு பரிசோதனை மையம்

1. **கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது** (IITK), இந்தியாவின் முதல் **அதி உயர் திசைவேக விரிவாக்க குழலமைப்புப்** பரிசோதனை மையத்தினை மிகவும் வெற்றிகரமாக உருவாக்கி சோதனை செய்துள்ளது.



2. இந்த மையமானது, மீயொலிவேகம் சார்ந்தச் சூழ்நிலைகளை உருவாக்கி, **3 முதல் 10 கிமீ/வி,** வரையிலான வேகத்தை உருவாக்கும் திறன் கொண்டது.

3. வளிமண்டலத்தில் விமானங்கள் நுழைதல், குறுங்கோள்களின் நுழைவு, ஸ்க்ராம்ஜெட் விமானங்கள் மற்றும் உந்துவிசை ஏவுகணைகள் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு இது முக்கியமானதாகும்.
4. S2 எனப்படும் இந்த அமைப்பு ஆனது **"ஜிகர்தண்டா"** என்று அழைக்கப் படுகின்றது.

## இந்தியாவின் முதல் செயல் திறன்மிகு தோட்டா

1. **சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம்** ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட **இந்தியாவின் முதல் 155 மில்லி மீட்டர்** குழல் விட்டம் கொண்ட வழிகாட்டுதலுடன் கூடிய திறன்மிகு **வெடிமருந்துகளை உருவாக்குவதற்காக** மியூனிஷன்ஸ் இந்தியா நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.
2. இந்த கூட்டிணைவு ஆனது, **பீரங்கித் துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் குழல்களின் துல்லியத்தன்மை மற்றும் தாக்குதல் தொலைவு** வரம்பை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. கூடுதலாக, வெடிமருந்துகள் **இலக்கைத் தாக்கும் போது அந்த இலக்கின் மீது ஏற்படும் பாதிப்பு மற்றும் அழிவினை அதிகரிப்பதை** இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.



## INSAT-3DS செயற்கைக்கோள்

1. **GSLV-F14 ஏவு கலத்தினைப் பயன்படுத்தி INSAT-3DS** ஏவுவதன் மூலம் **இந்தியா தனது வானிலை கண்காணிப்புத் திறன்களை** மேம்படுத்த உள்ளது.
2. இந்த **செயற்கைக்கோள் ஆனது வானிலை முன்னறிவிப்பு மற்றும் பேரிடர் எச்சரிக்கைக்காக** மேம்படுத்தப்பட்ட வானிலை **ஆய்வுகள் மற்றும் நிலம் மற்றும் பெருங்கடல் பரப்புகளை** கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
3. இது தற்போது சுற்றுப்பாதையில் உள்ள **INSAT-3D மற்றும் 3DR** செயற்கைக் கோள்களுக்கு அடுத்து தொடர் சேவைகளை வழங்கும்.

4. இது **தடையில்லாத சேவைகளை வழங்கச் செய்வதையும்**, இன்சாட் செயற்கைக் கோள் அமைப்பின் ஒட்டுமொத்தத் திறன்களைக் கணிசமாக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## இஸ்ரோ இளம் விஞ்ஞானி திட்டம் 2024 (யுவிகா)

1. **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்** (இஸ்ரோ) **யுவ விஞ்ஞானி காரியக்ரம் இளம் விஞ்ஞானி திட்டம் (YUVIKA) 2024** ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
2. யுவிகா **விண்வெளி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகள்**, குறிப்பாக கிராமப்புறங்களை குறிவைத்து அடிப்படை அறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. இந்தத் திட்டம் **STEM துறைகளில் ஆர்வத்தைத் தூண்டுவதையும் விண்வெளி ஆய்வில்** எதிர்கால திறமைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ககன்யான் பணி - 4 விண்வெளி வீரர் - நியமனம்

1. ககன்யான் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட **4 விண்வெளி வீரர்களின்** பெயர்களை திரு. மோடி தெரிவித்தார்.




2. அவர்கள் **குரூப் கேப்டன் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர்**, குரூப் கேப்டன் அஜித் கிருஷ்ணன், குரூப் கேப்டன் அங்கத் பிரதாப் மற்றும் விங் கமாண்டர் சுபான்ஷு சுக்லா.

3. ககன்யான் மிஷன் **இந்தியாவின் முதல் மனித விண்வெளி விமானத் திட்டமாகும்**, இதற்காக பல்வேறு இஸ்ரோ மையங்களில் விரிவான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.
4. நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், **2035-ம் ஆண்டுக்குள் இந்தியா** தனது விண்வெளி நிலையத்தை விண்வெளியில் அமைக்கும், இது விண்வெளியின் அறியப்படாத விரிவாக்கங்களை ஆய்வு செய்ய உதவும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் உள்ள புதிய ராம்சர் ஈரநிலங்கள்

1. ராம்சார் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களின் உலகளாவிய பட்டியலில் மேலும் ஐந்து இந்திய ஈரநிலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
2. இது நாட்டில் அதிக அங்கீகாரம் பெற்ற நீர் தேங்கியுள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளின் மொத்த எண்ணிக்கையை 80 ஆக உயர்த்துகிறது.
3. ராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஐந்து சதுப்பு நிலங்கள்
   - மாகடி கெரே பாதுகாப்புக் காப்பகம் - கர்நாடகா
   - அங்கசமுத்ரா பறவைகள் பாதுகாப்பு சரணாலயம் - கர்நாடகா
   - அகநாசினி முகத்துவாரம் - கர்நாடகா
   - கரைவெட்டி பறவைகள் சரணாலயம் - தமிழ்நாடு.
   - லாங்வுட் ஷோலா ரிசர்வ் காடு - தமிழ்நாடு.
4. 2 செய்தித் தளங்கள் மூலம், நாட்டிலேயே அதிக பட்சமாக மொத்தம் 16 ராம்சர் தளங்களுடன் தமிழ்நாடு தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்கிறது.

## STAR மதிப்பீட்டு முறை


1. **சர்வதேச இயற்கை வளங்காப்பு ஒன்றியம்** (IUCN) ஆனது **இனங்களின் அச்சுறுத்தல் குறைப்பு மற்றும் மறுசீரமைப்பு** (STAR) மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. இது **பெருங்கடல்களில் உள்ள பல்லுயிர் இழப்பைத் தடுக்கும்** நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. இது **முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் நிலப்பரப்பு பகுதிகளில்** பயன்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

4. STAR, உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்கம் சார்ந்த இலக்குகளை நோக்கிய ஒரு முக்கிய முன்னேற்றத்தை அளவிட உதவுகிறது என்பதோடு வளங்காப்பு முயற்சிகளில் அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் அமைப்புகளின் மீது முடிவெடுத்தல் என்ற நடவடிக்கையில் ஆதரவளிக்கிறது.




## தெராய் வளைவரை நிலப்பரப்பு


1. **நேபாளத்தின்** தெராய் வளைவரை நிலப்பரப்பு (TAL) முன்னெடுப்பு ஆனது, **ஏழு உலக மறுசீரமைப்பு முதன்மைத் திட்டங்களில்** ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
2. **2004 ஆம் ஆண்டில்** தொடங்கப்பட்ட இந்த **முன்னெடுப்பானது சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதையும் புலிகளுக்கான ஒரு வாழிடத்தினை உருவாக்கச்** செய்வதையும் நோக்கமாகக் கொண்டது.
3. இந்த முன்னெடுப்பு ஆனது **66,800 ஹெக்டேர் (165,000 ஏக்கர்) பரப்பிலான காடுகளை மீட்டெடுத்து**, பிராந்தியத்தில் வங்காளப் புலிகளின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரித்தது.



# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## குப்தேஸ்வர் காடு

1. **ஒடிசாவின் கோராபுட்** மாவட்டத்தில் உள்ள குப்தேஸ்வர் காடு, **மாநிலத்தின் நான்காவது பல்லுயிர்-பாரம்பரிய தளமாக** (BHS) அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இத்தளம் ஆனது **350 ஹெக்டேர்** பரப்பளவிலான வரையறுக்கப்பட்ட பகுதியில் பரவி உள்ளது.
3. குப்தேஸ்வரில் அமைந்த **சுண்ணாம்புக் குகைகளில் தெற்கு ஒடிசாவில்** காணப்படும் மொத்த **16 வகை வெளவால் இனங்களில் எட்டு வகை வெளவால்கள்** இங்கு காணப் படுகின்றன.




## ருமேனியாவில் உள்ள மஹ்முதியா ஈரநிலம்


1. **உலக வனவிலங்கு நிதியம்** (WWF) ஆனது **மஹ்முதியா ஈரநிலத்தை 'தேசிய நலன் சார்ந்த சூழலியல் மறுசீரமைப்புப் பகுதி'** யாக வகைப்படுத்துமாறு ருமேனிய நாட்டு அரசாங்கத்தினை வலியுறுத்தியுள்ளது.
2. அதன் இயற்கை முன்னேற்றத்தைப் பாதுகாத்து சமூகச் செழிப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3. ருமேனிய தன்யுபு கழிமுகத்திற்குள் இயற்கையாகவே மறு உருவாக்கம் செய்யப்பட்ட ஈரநிலங்களின் குறிப்பிட்ட பகுதி வேளாண் நிலமாக மாற்றப்படுவதற்கான நிலையை எதிர்கொள்கின்றன.

4. **2023 ஆம் ஆண்டு ஜூன்** மாதத்தில், **தன்யுபு ஆற்றின் உயர் ஓதமானது, மஹ்முடியாவில் ஒரு சதுப்பு நிலத்தைச்** சூழ்ந்திருந்த கரையை உடைத்தது.
5. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் ஆனது **1,000 ஹெக்டேர் வேளாண் நிலங்களை மூழ்கடித்து**, அவற்றை கழிமுகச் சுற்றுச்சூழல் அமைப்பாக மாற்றியது.




**அண்டார்டிக் ஆய்விற்கான குயின்லிங் நிலையம்**


1. அண்டார்டிக் பகுதியில் உள்ள **சீனாவின் ஐந்தாவது அறிவியல் முகாமிற்கு குயின்லிங் நிலையம்** என்று அதிகாரப் பூர்வமாகப் பெயரிடப்பட்டுள்ளது.
2. இது அண்டார்டிகாவில் அமைக்கப்பட்டுள்ள **மூன்றாவது சீன ஆராய்ச்சி தளம்** மற்றும் இது ஆண்டு முழுவதும் செயல்படும்.
3. சீன நாடானது **1985 முதல் 2014 வரை** அண்டார்டிக் பகுதியில் ஏற்கனவே **சோங்ஷான், டைஷான், குன்லுன் மற்றும் கிரேட் வால்** எனப்படும் நான்கு ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றைக் கட்டமைத்துள்ளது.



# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## நகோயா நெறிமுறை - கேமரூன்

1. **மத்திய ஆப்பிரிக்காவில்** உள்ள கேமரூன் நாடு ஆனது தற்போது அணுகல் மற்றும் பயன் பகிர்வுக்கான நகோயா நெறிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது.




2. இது **மரபணு வளங்கள் மற்றும் பாரம்பரியத் தகவல்களைப்** பயன்படுத்துவதன் பலன்கள் நியாயமான மற்றும் சமமான முறையில் பகிர்ந்து கொள்ளப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
3. நகோயா நெறிமுறை என்பது **பல்லுயிர்ப் பெருக்கத்தின் அணுகலில் நியாயமான மற்றும் சமமான பலன் பகிர்வைப்** பூர்த்தி செய்கின்ற **உயிரியல் பன்முகத்தன்மை** மீதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும்.
4. ஒரு பல்லுயிர்ப்பெருக்கம் நிறைந்த பகுதியாக உள்ள கேமரூன் நாடானது, இங்கு **11,000 தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிர்கள்** இனங்கள் உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
5. நகோயா நெறிமுறையானது **ஜப்பானின் நகோயா** நகரில் உயிரியல் பன்முகத் தன்மை மீதான உடன்படிக்கையின் மூலம் **2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டு, 2014 ஆம் ஆண்டில்** நடைமுறைக்கு வந்தது.

## சைப்ரஸுக்கு அருகில் நீருக்கடியில் அமைந்த பள்ளத்தாக்கு

1. சைப்ரஸ் அருகே **இதுவரை அறிந்திராத நீருக்கடியில் அமைந்துள்ள பள்ளத்தாக்கு** ஒன்றினை **இஸ்ரேலிய அறிவியலாளர்கள்** கண்டறிந்துள்ளனர்.
2. இந்தப் பள்ளத்தாக்கு, அதன் அருகில் அமைந்த **நீரடி மலையின் பெயரால் எரடோஸ்தீனஸ்** என்று அழைக்கப்படுகிறது.

3. இது **சுமார் 5.5 மில்லியன் ஆண்டுகளுக்கு** முன்பு நடந்த **மெசினியன் உவர்தன்மை** அதிகரிப்பு நிகழ்வின் போது தோன்றியது.
4. இந்தப் பள்ளத்தாக்கு சுமார் **10 கிமீ அகலமும் 500 மீ** ஆழமும் கொண்டது என்பதோடு இது உப்புப் படிவுகள் படிவதற்கு முன்னதாக மெசினியன் காலத்தின் தொடக்கத்தில் புதையுண்டது.




# விளையாட்டு செய்திகள்

## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2024

1. இந்திய அரசாங்கத்தின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் முதன்மை நிகழ்வின் ஆறாவது பதிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது.
2. தமிழ்நாடு KIYG 2024 ஐ **சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை** ஆகிய நான்கு நகரங்களில் நடத்தியது.

| Rank | State | Gold | Silver | Bronze | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Maharashtra | 57 | 48 | 53 | 158 |
| 2 | Tamil Nadu | 38 | 21 | 39 | 98 |
| 3 | Haryana | 35 | 22 | 46 | 103 |
| 4 | Delhi | 13 | 18 | 25 | 56 |
| 5 | Rajasthan | 13 | 17 | 17 | 47 |
| 6 | Telangana | 13 | 4 | 7 | 24 |
| 7 | Uttar Pradesh | 11 | 13 | 18 | 42 |
| 8 | Punjab | 11 | 13 | 15 | 39 |
| 9 | Kerala | 11 | 9 | 15 | 35 |
| 10 | Manipur | 10 | 11 | 10 | 31 |

3. **மகாராஷ்டிரா** 57 தங்கம், 48 வெள்ளி மற்றும் 53 வெண்கலப் பதக்கங்களுடன் **பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப்** பெற்று, கேலோ இந்தியா யூத் கேம்ஸ் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

4. **போட்டியை நடத்திய தமிழ்நாடு** 38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 39 வெண்கலத்துடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

### சிறந்த விளையாட்டு நாயகருக்கான ஏசஸ் விருதுகள் 2024

1. இந்தியக் கிரிக்கெட் வீரர் **முகமது ஷமி மற்றும் சதுரங்க கிராண்ட் மாஸ்டர் R. வைஷாலி** ஆகியோர் முறையே **'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்** (அணி விளையாட்டு)' மற்றும் **'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை** (தனி நபர்)' விருதுகளை வென்றுள்ளனர்.

### உறைந்த ஏரி மீது நடத்தப்படும் மாரத்தான் போட்டி

1. **2024 ஆம் ஆண்டு பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான்** போட்டியானது **லடாக்கின் லே நகரில்** நடைபெற்றது.
2. **போபாலைச் சேர்ந்த பகவான் சிங் மற்றும் மகேஷ் குரானா** ஆகியோர், பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான் போட்டியை நிறைவு செய்ததை அடுத்து, இத்தகையப் போட்டியில் வென்ற குறிப்பிட்ட விளையாட்டு வீரர்களின் பட்டியலில் இணைந்து உள்ளனர்.
3. **லடாக்கின் இரண்டாவது பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான்** போட்டியானது, **'உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த உறைந்த ஏரி மாரத்தான்'** என்று அழைக்கப் படுகிறது.
4. **பகவான் என்பவர்** உலகின் மிக உயரமான **எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த முதல் மலையேறும் வீரர்** ஆவார்.

## <u>விருதுகள் மற்றும் நிகழ்வுகள்</u>

### கலைஞர் எழுதுகோல் விருது

1. **மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமிக்கு** 2022ம் ஆண்டுக்கான கலைஞர் எழுதுகோல் விருது சமீபத்தில் வழங்கப்பட்டது.
2. **சமுதாய நலனுக்காக பாடுபடும் பத்திரிக்கையாளர்களுக்கு** 'கலைஞர் எழுதுகோல் விருது வழங்கப்படுகிறது.
3. இந்த விருதானது **ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு** மற்றும் சான்றிதழும் கொண்டது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## கிராமி விருதுகள் 2024

1. 66வது ஆண்டு கிராமி விருது வழங்கும் விழாவானது (2024) **அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில்** நடைபெற்றது.
2. இந்திய இசைக் கலைஞர்களான **சங்கர் மகாதேவன் மற்றும் ஜாகிர் ஹுசைனின்** கலப்புப் பாடல் இசைக் குழுவான **'சக்தி'**, 'சிறந்த உலகளாவிய இசைத் தொகுப்பு' என்ற பிரிவில் கிராமி விருதைப் பெற்றுள்ளது.
3. **ஜாகிர் ஹுசைன் 'பஷ்டோ'** மொழியில் தான் வழங்கியப் பங்களிப்பிற்காக **"சிறந்த உலகளாவிய இசை நிகழ்ச்சி'** என்ற பிரிவில் கிராமி விருதை பெற்றுள்ளார்.
4. **டெய்லர் ஸ்விஃப்ட்**, ஆண்டின் **சிறந்த பாடல்** தொகுப்பிற்கான **விருதினை நான்கு முறை வென்ற முதல் கலைஞர்** என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
5. **தென்னாப்பிரிக்கப் பாடகி** டைலா **சிறந்த ஆப்பிரிக்க இசை நிகழ்ச்சி** என்ற முதல் விருதைப் பெற்று வரலாறு படைத்துள்ளார்.



## ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக் கலைஞர்



1. ஒரு **சிறிய பனிப்பாறையில்** உறங்கும் துருவக் கரடியின் படம் ஆனது 2023 ஆம் ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக்கலைஞருக்கான பீப்பிள்ஸ் சாய்ஸ் விருதைப் பெற்றுள்ளது.
2. இது **நார்வேயின் ஸ்வால்பார்ட் தீவுக்கூட்டத்தில்** பிரிட்டிஷ் நாட்டினைச் சேர்ந்த **நிமா சரிகானி** என்பவரால் படம் பிடிக்கப்பட்டது.
3. **இயற்கை வரலாற்று அருங்காட்சியக** அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் இந்தப் புகைப்படப் போட்டியை நடத்துகிறது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## பிரபலங்கள்

### டாக்டர் நித்யா ஆனந்த்

1. **'சஹேலி' எனப்படும்** இந்தியாவின் **முதல் வாய்வழிக் கருத்தடை** மாத்திரையை கண்டுபிடித்த டாக்டர் நித்யா ஆனந்த் சமீபத்தில் காலமானார்.
2. இவர் 'சஹேலி' என்று பிரபலமாக அறியப்படும் **சென்க்ரோமன் கண்டுபிடிப்பின்** பின்னணியில் இருந்தவர் ஆவார்.
3. இது **உலகின் முதல் மற்றும் ஊக்கமருந்து சாராத, ஹார்மோன் சாராத**, வாரத்திற்கு ஒரு முறை எடுக்கக்கூடிய ஒரே வாய்வழி கருத்தடை மாத்திரையாகும்.
4. இது **1986 ஆம் ஆண்டு** அப்போதையப் **பிரதமர் ராஜீவ் காந்தி** அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.
5. இன்றும் **உலகின் முதல் மற்றும் ஊக்கமருந்து சாராத, ஹார்மோன் சாராத கருத்தடை மாத்திரை** இது மட்டுமே ஆகும்.

### தெற்கு ரயில்வேயின் முதல் திருநங்கை TTE

1. 37 வயதான **சிந்து கணபதி**, தெற்கு ரயில்வேயின் முதல் திருநங்கை பயணச்சீட்டு பரிசோதகராக (TTE) உருவெடுத்துள்ளார்.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2023

1. 2023 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டில் மதிப்பிடப்பட்டுள்ள 180 நாடுகளில் **இந்தியா 93வது இடத்தைப்** பெற்றுள்ளது.
2. **ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்** அமைப்பின் அறிக்கையின்படி, இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் மாறாமல் உள்ளது.
3. இந்தக் குறியீட்டில் **டென்மார்க் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக** முதலிடத்தில் உள்ளது.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2024

1. பிரான்ஸ் நாட்டின் கடவுச் சீட்டு ஆனது **194 நாடுகளுக்கு** நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணிப்பதற்கான அணுகலை வழங்குவதால் இந்தப் பட்டியலில் **பிரான்ஸ் முதல் இடத்தினைப்** பெற்றுள்ளது.
2. இந்தப் பட்டியலில் கடந்த ஆண்டில் **84வது இடத்திலிருந்த இந்தியா** ஒரு இடத்தை தவற விட்டு, **85வது இடத்திற்கு** நகர்ந்துள்ளது.
3. கடந்த ஆண்டு இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் **60 நாடுகளுக்கு** நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்க முடியும் என்ற நிலையில் இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையானது **62 ஆக அதிகரித்துள்ளது.**

| PASSPORT | RANK IN 2024 | ACCESS |
|---|---|---|
| France | 1st | 194 |
| Germany | 1st | 194 |
| Italy | 1st | 194 |
| Japan | 1st | 194 |
| Singapore | 1st | 194 |
| Spain | 1st | 194 |

## டாம்டாம் போக்குவரத்துக் குறியீடு

1. **பெங்களூரு (6வது) மற்றும் புனே (7வது)** ஆகிய இரண்டு இந்திய நகரங்கள், 2023 ஆம் ஆண்டு உலகளவில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பத்து நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
2. போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள நகரமாக **இலண்டன் தொடர்ந்து முன்னணியில்** உள்ளது.
3. 2023 ஆம் ஆண்டில் சிலிக்கான் நகரத்தில் (பெங்களூர் நகரம்) பயணம் செய்வதற்கு **'மிக மோசமான நாள்' ஆக செப்டம்பர் 27 ஆம் தேதி** (புதன்கிழமை) குறிப்பிடப் பட்டது.
4. இதில் **டெல்லி 44வது இடத்தையும், மும்பை 52வது** இடத்தையும் பெற்றன.

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | கருப்பொருள் |
|---|---|---|
| **உலக சமய நல்லிணக்க வாரம்** - பிப்ரவரி முதல் வாரம் | | |
| பிப்ரவரி 01 | இந்திய கடலோர காவல்படை தினம் | - |
| பிப்ரவரி 02 | உலக சதுப்பு நில தினம் | "சதுப்பு நிலங்கள் மற்றும் மனித நல்வாழ்வு" |
| பிப்ரவரி 04 | உலக புற்றுநோய் தினம் | 'மருத்துவ நலச் சேவையில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்தல்: புற்றுநோய்ச் சிகிச்சைக்கான அணுகலைப் பெற அனைவருக்கும் தகுதியுண்டு'. |
| பிப்ரவரி 06 | சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் | 'அவரது குரல். அவளின் எதிர்காலம்' |
| பிப்ரவரி 10 | உலக பருப்பு வகைகள் தினம் | '#பருப்பு வகைகள் : ஊட்டமளிக்கும் மண் மற்றும் மக்கள்'. |
| பிப்ரவரி 11 | அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் | "அறிவியல் தலைமைத்துவத்தில் பெண்கள் மற்றும் பெண்கள், நிலைத்தன்மைக்கான புதிய சகாப்தம்". (முதன்மை கருத்துரு) "அறிவியல் பற்றி சிந்தித்தல்... அமைதியைப் பற்றிய சிந்தித்தல்" (உட் கருத்துரு) |
| பிப்ரவரி 13 | உலக வானொலி தினம் | 'வானொலி : தகவலளிப்பு, பொழுதுபோக்கு மற்றும் கல்வி வழங்கும் ஒரு நூற்றாண்டு' |
| பிப்ரவரி 17 | உலக சுற்றுலா நெழில்திறன் தினம் | சுற்றுலா பின்னடைவின் எதிர்காலத்தை வழிநடத்துதல். |
| பிப்ரவரி 20 | உலக சமூக நீதி தினம் | "இடைவெளிகளைக் குறைத்தல், கூட்டணிகளை உருவாக்குதல்". |

# பிப்ரவரி மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 21 | சர்வதேச தாய்மொழி தினம் | "பலமொழிக் கல்வி என்பது தலைமுறைகளுக்கு இடையேயான கற்றலின் தூண்". |
| பிப்ரவரி 22 | உலக சிந்தனை தினம் | 'எங்கள் உலகம், நமது செழிப்பான எதிர்காலம்.' |
| பிப்ரவரி 27 | உலக அரசு சாரா அமைப்புகள் தினம் | "ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்: நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு". |
| பிப்ரவரி 27 | உலக புரத தினம் | புரதத்துடன் நிவர்த்தி செய்யுங்கள் |
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் | விக்சித் பாரதத்திற்கான உள்நாட்டு தொழில்நுட்பங்கள். |


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911